தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மாசி 17உ புதன் (29-2-56) ★ ★ • வெளியூர்: மாசி 18உ வியாழன் (1—3—56) [இதழ் 220

இந்திய எல்லைகளில் 656 தடவை பாகிஸ்தான் தாக்குதல்

சென்ற 1954, 1955 ஆகிய இரண்டு ஆண்டுகளில் இந்திய எல்லையோரங்களில், 656 தடவைகள் பாகிஸ்தானியர் தாக்கியிருக்கின்றனர்.

இச்செய்தியை ராஜ்யங்கள் சபைக் கூட்டத்தின்போது பாராளுமன்றச் செயலாளர் தெரிவித்திருக்கிறார்.

இராஜஸ்தான் எல்லையில் 340 முறையும், மேற்கு வங்க எல்லையோரத்தில் 116 தடவைகளும், அசாம் மாநில எல்லைகளில்

(4-ம் பக்கம் பார்க்க)

'சென்னைக்குரிய பங்கு கிடைக்க வேண்டும்'

'மாற்றாந்தாய் மனப்போக்கால் அதிருப்தியே வளரும்'

'எதிர்ப்பு கண்டு மத்திய அரசாங்கம் சீறுவதில் பயனில்லை'

பெரும் தொழில்கள் நிறுவும் முறை பற்றி பி. டி. இராசன்

"பெருந் தொழில்களை நாடு முழுவதும் நியாயமான முறையில் நிர்மாணிக்க வேண்டும்; தனக்குரிய பங்கை சென்னையும் பெற வேண்டும்; சில ராஜ்யங்களுக்கு மாற்றாந்தாய் மனப்போக்குக் காட்டப்படுமானால், அவைகள் அதிருப்தி கொண்டு கண்டிக்க முன்வந்தால் அவைகளை மத்திய அரசாங்கம் குறைகூறக் கூடாது."

—இவ்வாறு, சென்னை சட்டசபையில் வரவு - செலவுத் திட்ட விவாதத்தின்போது, திரு பி. டி. இராசன் அவர்கள் இடித்துரைத்தார்.

அவர் மேலும் பேசியதாவது:—

"உப்புக்குச் சமமாக சர்க்கரையையும் மதித்து, மிகைபடும் வரி விதிப்பிலிருந்து சர்க்கரைக்கு விதி விலக்கு அளிக்க வேண்டும்.

"கிராம உத்தியோகஸ்தர்களுக்குப் போதுமான ஊதியம் தரப்பட வேண்டும்; அவர்களை மேலதிகாரிகள் நடத்தும் போக்கு மிக மோசமாக இருக்கிறது.

"குடி தண்ணீர் வசதிக்காக மேலும் பணம் கூடுதலாக ஒதுக்கி இருக்கவேண்டும். பரிசுத்தமான குடிதண்ணீர் கிடைக்காத குறைபாடுதான் நகரப் பகுதிகளில் உண்டாகும் தொத்து நோய்களுக்குக் காரணமாகும்."

'தாட்சண்யத்திற்குக் கட்டுப்பட வேண்டியவராகின்றனர்'

'மக்கள் பழிப்புக்கும் பாத்திரமாகின்றனர்'

'இவ்விபரீதத்திற்கு மந்திரிகளே பொறுப்பாளிகள்'

காங்கிரஸ் அமைச்சர்கள் — மாவட்ட அதிகாரிகள் உறவு பற்றி பி. டி. இராசன் எச்சரிக்கை

சென்னை, பிப். 28—

"மந்திரிகளின் சுற்றுப்பயணத்தின்போது அவர்களின் உபயோகத்திற்காக, தனி நபர்களின் மோட்டார்கார்கள் மாவட்ட அதிகாரிகளால் கோரப்படுகின்றன.

"அவ்வாறு கோரப்படுவதின் மூலம், அந்த அளவிற்கு தாட்சண்யத்திற்குக் கட்டுப்படவேண்டிய நிலைக்கு மாவட்ட அதிகாரிகளை அரசாங்கம் துரத்துகிறது.

"இப்படியே இந்த விவகாரம் தொடர்ந்து நடைபெறுமானால், பழிப்புக்கு ஆளாகாத நிலையில் அதிகாரிகள் இருப்பர் என அரசாங்கத்தால் எதிர்பார்க்க முடியாது.

"எனவே, இந்த விபரீதம் தொடரக்கூடாது என அரசாங்கத்தை எச்சரிக்கின்றேன்."

என்று, சென்னை சட்டசபையில், பி. டி. இராசன் அவர்கள், வரவு செலவுத் திட்டத்தின்மீது பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய சர்க்காருக்கு மைசூரின் கேள்வி

'வருமான நஷ்டத்தை ஈடு செய்ய இயலுமா?'

பெங்களூர், பிப். 28—

மைசூர் மாநிலத்தில் தற்போது பாதிப் பிரதேசத்தில்தான் மதுவிலக்கு அமுலில் இருக்கிறது.

மாநிலம் முழுவதிலும் பூரண மதுவிலக்கு அமுல் செய்யப்பட்டால் ஆண்டுதோறும் ரூ. 145 - இலட்சம் முதல் ரூ. 200 இலட்சம் வரையில் வருமானம் நஷ்டம் ஏற்படக்கூடுமாம.

ஆகவே, 'மதுவிலக்கை, மைசூர் மாநிலத்தின் பாக்கியுள்ள பகுதிகளிலும் அமுல் நடத்தினால் ஏற்படக்கூடிய வருமான நஷ்டத்தை ஈடுசெய்ய முடியுமா?' என்று இந்திய சர்க்காரை மைசூர் சர்க்கார் கேட்டிருக்கிறார்கள்.

மைசூர் சட்டசபைகளில், இது பற்றி கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், ஸ்தல ஸ்தாபன அமைச்சர், 'மாநில சர்க்காரின் கேள்விக்கு மத்திய சர்க்காரிடமிருந்து இன்னும் பதில் கிடைக்கவில்லை' என்று குறிப்பிட்டுள்ளார்.

உண்மையல்லவாம்!

சென்னை, பிப். 27—

தஞ்சை மாவட்டம், சீர்காழி தாலுகா நெப்பத்தூரில், மணிக்கு 240 கன அடி பெட்ரோலியம் இடைப்பதாகப் பம்பாயைச்சேர்ந்த ஒரு நிபுணர் குழு தெரிவித்திருப்பதாகக் கூறப்பட்டது; அது பற்றி சென்னை சட்டசபையில் கேள்வி ஒன்று எழுப்பப்பட்டபோது, 'அவ்வாறு கூறப்படுவது உண்மையல்ல; பெட்ரோலியம் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்படவில்லை; ஆனால் அது பற்றி ஆராய்ந்துவிடப்படுகிறது' என்று விவசாய அமைச்சர் பக்தவத்சலம் பதிலளித்துள்ளார்.

நேருவின் வாக்கெடுப்பு யோசனைக்கு வரவேற்பு

அர்த்தால் பற்றிய தவறான கருத்துக்கு விளக்கம்

சர்வகட்சிக் கூட்டணியின் முடிவு

"சென்னையில் நடைபெற்ற அர்த்தால் பலாத்காரமானது என்று பண்டித நேரு கூறியுள்ளதாக வந்த செய்தி, தவறான தகவல்மீது கூறப்பட்டிருப்பதாகும்; சரியான தகவலை, சென்னை அரசாங்கம் அவருக்கு அளிக்கக்கூடும். அர்த்தால் சென்னை இராஜ்யம் முழுவதும் நடைபெற்று இருக்கிறது. அமைதியான முறையிலேயே அர்த்தால் நடைபெறும் என்பதைத் துவக்கத்திலேயே, அதைத் துவக்கினவர்கள் விளக்கமாக அறிவித்திருக்கிறார்கள். தமிழ் நாட்டு மக்கள் எங்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி அர்த்தாலை மிகவும் அமைதியான வகையில் நிறைவேற்றி இருக்கிறார்கள் என்பதை அறிவிக்க நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். சென்னையில் நடைபெற்ற அர்த்தாலை பம்பாய், கல்கத்தாவில் நடைபெற்ற அர்த்தால்களுடன் ஒப்பவைத்துப் பார்த்து, பண்டித நேரு தமக்குத் தாமே ஒரு முடிவுக்கு வரட்டும்.

"பண்டித நேரு பின்வருமாறு கூறினதாகத் தெரியவருகிறது:—

'எல்லையோரத்திலுள்ள ஒரு சிறு நிலப்பகுதிக்காகவே சென்னையும், கேரளமும் பிணங்கிக்கொண்டிருப்பதில், அப்பகுதியே தீர்மானித்துக் கொள்ளட்டும் என்ற கருத்தை ஒருவரால் புரிந்துகொள்ள முடியும்; அதாவது, அங்கிருக்கும் மக்கள் முடிவு கட்டிக்கொள்ளட்டும் என்கிறேன்.'

"இது ஜனநாயகக் கோட்பாடாகும். இக்கோட்பாடு செயலாற்றப்பட வேண்டும் என்பதே நமது குறிக்கோள்.

"இந்த அர்த்தால் எந்த ஒரு தனிக்கட்சியாலும் துவக்கப்பட்டது அல்ல; பல கட்சிகளடங்கிய ஒரு கூட்டணியினால் துவங்கப்பட்டதாகும். இந்த அர்த்தாலின் குறிக்கோள், இந்திய யூனியனிலிருந்து வெளியேறுவது அல்ல."

மேற்படி தீர்மானத்தை சர்வகட்சி கூட்டணியின் செயற்குழு வெளியிட்டுள்ளது.

28—2—56 பகல் 2½ மணிக்கு, சர்வ கட்சிக் கூட்டணியின் செயற்குழுக் கூட்டம், தோழர் பி. டி. இராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

செயற் குழு உறுப்பினர்களான தோழர்கள் ம. பொ. சிவஞானம், ப. ஜீவானந்தம், என். வி. நடராசன் ஆகியோரும், விசேட அழைப்பின் மீது தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. விநாயகம், எம் எல்.ஏ., எம். பி சுப்பிரமணியம், எம் எல்.ஏ., கஜபதி(நாயக்கர்) எம் எல் சி., ஈ. வெ. கி. சம்பத், கே. முத்தையா, ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. ஆகியோரும் வந்திருந்தனர்.

பாகிஸ்தானுக்கு ரஷ்யா தரும் உதவி

மாஸ்கோ, பிப். 28—

ஐ. நா. தொழில் நுட்ப உதவி நிதி ஏற்பாட்டின்படி, சோவியத் ரஷ்யா பாகிஸ்தானுக்கு 200 டன் குழாய்களையும், 3 நடமாடும் மின்சார நிலையங்களையும் ஒதுக்கியுள்ளதாகவும் விரைவில் மேலும் பல உதவிகள் அளிக்கப்படுமென்றும் செய்தி ஒன்று கூறுகிறது.

துவக்கப் பள்ளி ஆசிரியர்கள் ஊதிய உயர்வு

புதுடில்லி, பிப் 28—

மக்கள் சபையில், மத்திய சர்க்கார் கல்வி அமைச்சர் அபுல்கலாம் ஆசாத், துவக்கப்பள்ளி ஆசிரியர்களின் சம்பளங்களை உயர்த்த வேண்டும் என்பது, கொள்கையளவில் ஒப்புக் கொள்ளப்பட்டுவிட்டதென்றும், இது சம்பந்தமான விவரங்கள் தயாரிக்கப் படுகின்றன என்றும் கூறியுள்ளார்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், பெரிய துறைமுகங்களின் அபிவிருத்திக்காக ரூ. 40 கோடியும், சிறு துறைமுகங்களின் அபிவிருத்திக்காக ரூ. 5 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

விடுதலை வீரர்களுக்கு பிரதமர் எச்சரிக்கை

கிளர்ச்சியை நிறுத்தினால்தான் தேர்தல் நடைபெறுமாம்!

பாரிஸ், பிப். 28—

அல்ஜீரியாவில் கிளர்ச்சி செய்யும் விடுதலைவீரர்களுக்கு, பிரான்ஸ் பிரதமர் விடுத்துள்ள வேண்டுகோளில் அச்சுறுத்தலும் தொனிக்கிறது!

'ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டுக் கிளர்ச்சியை நிறுத்துங்கள்; என்னுடைய இந்த வேண்டுகோளுக்கு மதிப்பு அளிக்கப்படுமானால், மூன்று மாதங்களுக்குள் கட்டுப்பாடு அற்ற சுயேச்சையான தேர்தலை நடத்துவதற்கு வாக்குறுதி அளிக்கிறேன்,' என்று அறிவித்துள்ள அவர், அதே நேரத்தில் ஒரு அச்சுறுத்தலையும் தந்துள்ளார்:—

"அல்ஜீரிய மக்களுக்கு பிரான்ஸ் மரியாதை செலுத்துகிறது. அல்ஜீரியாவில் பிரெஞ்சுக்காரர்களுக்கும், முகம்மதியர்களுக்கும் சமஉரிமையும் நீதியும் வழங்கப்படும்; ஆனால், அல்ஜீரியா பிரான்ஸுடன் இணைக்கப்பட்டுத்தான் இருக்கும்; இந்த இணைப்பை எவரும் [illegible] டித்துவிட முடியாது. இந்த எனது வேண்டுகோளை [illegible] கோருவோர் மறுத்தால், சொத்துக்கும், உயிருக்கும் பாதுகாப்புத் தர பிரான்ஸ் தனது முழுபலத்துடன் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்."

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 29-2-'56 புதன்

அரசியல் உலகில் ஒரு அவமானச் சின்னம்

'கயவர்களின் இறுதிப்புகலிடம் அரசியல்' என்றான் ஒரு ஆங்கில மேதை. அதை மெய்ப்பித்துக் காட்டும் நிலையில்தான் நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் அவர்களின் போக்கும் இருந்துவருகிறது.

அறிவு, ஆற்றல், சேவா உணர்ச்சி ஆகியவற்றிற்குரிய பரிசாக, அமைச்சர் பதவி கனம் சுப்பிரமணியத்திற்கு அளிக்கப்பட்டு இருக்கவில்லை. அன்பர் ஆச்சாரியாரின் அடிவருடி என்பதினாலேயே, அப்பதவியில் அவர் அமர்த்தப்பட்டிருக்கிறார் என்பது பகிரங்க இரகசியம்.

சட்டசபை காங்கிரஸ் கட்சி தலைவர் பதவிக்குத் தம்மையே எதிர்த்துத் தோற்றுப்போன கோவை சுப்பிரமணியம் அவர்களுக்கு, தமது அமைச்சர் குழுவில் இடமளித்ததை, கனம் காமராசரின் இராஜதந்திரம் என்று அக்காலத்தில், சிலர் கூறினர். காலப்போக்கில், அது பொய்யாகிவிட்டது.

தமது கல்லாமையின் எதிரொலியே, அவரையும் ஒரு அமைச்சராக ஏற்றுக்கொள்ளும்படி கனம் காமராசரைக் கட்டாயப்படுத்தியது என்ற உண்மை விளக்கமாகி வருகிறது.

அமைச்சர் குழுவில், அவரையும் ஒரு அமைச்சராக—அதிலும் சிறப்பாகக் கல்வி-நிதித் துறைகளுக்கு அமைச்சராக ஏற்றுக்கொண்டமைக்கு வேறொரு பொருத்தமான காரணத்தையும் கூறக்கூடும். அதாவது, கனம் சுப்பிரமணியம் அளவிற்கு அறிவாற்றல் உள்ளவர்கள் காங்கிரஸ் சட்டசபை கட்சியில் கிடைப்பது அரிதாக இருப்பதினாலேயே, சுப்பிரமணியம் அவர்களுக்குக் கனமாகும் பேறு கிடைத்தது எனக் கூறுவது மிகையாகாது. முதலமைச்சரைக் கொண்டுதானே அவர் கட்சியில் உள்ள மற்றவர்களைக் கணிக்க வேண்டியதும் நியாயமாகும்.

கனம் சுப்பிரமணியம் அவர்களுக்குப் பதவி கிடைத்ததற்கு வேறு ஒரு சிறப்பையும் காரணமாகக் கொள்ளக்கூடும். அத்தகு சிறப்புடையவர்கள், அரைகுறையாகச் சிறப்புப் பெற்றிருந்தாலும் அதைச் செவ்வனே செயலாற்றக் கூடியவர்கள் சுப்பிரமணியம் நீங்கலாக வேறு ஒருவரும் காங்கிரஸ் கட்சியில் இருக்க முடியாது என்பதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதே.

அதாவது, குறிப்பிட்ட சிறப்பும் அதைச் செயல்படுத்தும் திறமும் மற்றவர்களிடமில்லாத அளவு கனம சுப்பிரமணியம் அவர்களிடம என்ன இருக்கின்றன?—என்பதற்கு விரிவான விளக்கம் தேவையே இல்லை. கொள்கை பிடிப்பு, சொல்லும் செயலும் ஒத்திருக்கச் செயல்படும் பண்பு ஆக இவை இரண்டையும் கனம் சுப்பிரமணியம் அறியவே அறியார். பதவியை விடாப்பிடியாகப் பிடித்துக் கொள்வதற்கு எப்படி எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதுதான் அவர் கற்றுள்ள அரிய வித்தையாகும். அவ்வித்தையில் கனம் சுப்பிரமணியத்திற்கு ஒப்பாரும் மிக்காரும் கிடையவே கிடையாது. எனவே, அரசியல் உலகில் அவரை ஒரு அவமானச் சின்னமாகத்தான், கொள்கைப் பிடிப்பும் மானத்தின்மீது கண்ணும் கொண்டிருப்பவர்கள் கூறுவார்கள்.

அன்பர் ஆச்சாரியார் அமைச்சர் குழுவிலும் கனம் சுப்பிரமணியம்தான் கல்வி அமைச்சராக இருந்து வந்தார். ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டத்தைப் புகழ்ந்து பேசி புகுத்தி இடர்பட்ட அவரேதான் இப்பொழுதுள்ள அமைச்சர் குழுவில் இடம் பெற்றதும், புதிய கல்வித் திட்டத்தை வாபஸ் பெற்றுக் கொண்டார்.

கொள்கைப்பற்று இருக்கிறவராக இருந்தால் அவர் என்ன செய்திருக்க வேண்டும்? புதிய கல்வித் திட்டத்தை வாபஸ் பெற கண்டிப்பாக மறுத்துவிட்டிருக்க வேண்டும். அவ்வாறு மறுத்திருப்பாரானால் அவர் மேலும் நீடித்து கல்வி அமைச்சர் பதவியில் இருந்திருக்க முடியாது; பதவியிலிருந்து அவர் தள்ளப்பட்டிருப்பார்.

குறிப்பிட்டக் கொள்கையைக் காட்டிலும் பதவிதான் பெரிதென அவர் கருதிக்கொண்டிருப்பதால்தான், கொள்கையை உதறி எறிந்துவிட்டு, பதவியைக் கெட்டியாகப் பற்றித் தொங்கத் தொடங்கிவிட்டார். எனவே, அரசியல் உலகில் கொள்கைப் பற்றில்லாத ஒரு அவமானச் சின்னமாக அவர் விளங்குகிறார் எனக் கூறுவதுதானே பொருத்தமாகும்.

இன்றைய நிலையில் அடிபட்டுவரும் தட்சிணப் பிரதேசப் பேச்சிலும், அவர் போக்கு அப்படித்தான் இருக்கிறது. எதிர்காலத்துப் பதவியை மனதில்வைத்துக்கொண்டுதான், மேலிடத்து அன்பையும ஆதரவையும் பெற, தட்சிணப் பிரதேச ஆதரவில் அவர் தீவிரமாக முனைந்திருப்பதாக நம்பப்படுகிறது. அவ்வகையில், அவருக்கு அமிர்தசரஸ் காங்கிரஸ் மேடையிலேயே மேலிடத்தின் ஆசீர்வாதம் அச்சாரமாகக் கிடைத்தும் இருக்கிறது.

அடுத்த ஆண்டு வரவு-செலவு திட்டத்தை சமர்ப்பித்து, இரண்டாவது திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்று கனம் சுப்பிரமணியம் ஓலமிட்டு இருக்கிறார். ரூபாய் இரண்டாயிரம் கோடி வரை முதலீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள இரண்டாவது திட்டத்தில் தென்னாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டிய நியாயமான விகித சாரத்தை இந்தியப் பேரரசும் திட்டக் குழுவும் ஒதுக்கத் தவறிவிட்டதாக நிதி அமைச்சர் எடுத்துக் காட்டி இருக்கிறார்.

இதுபோன்றே, முதலாண்டுத் திட்டத்திலும் தென்னாட்டிற்கு இழைக்கப்பட்ட ஓர வஞ்சனையை நிதி அமைச்சர் ஏற்கனவே சுட்டிக்காட்டி இருக்கிறார். அப்பொழுது சுட்டிக்காட்டினதுதான் மிச்சமாயிற்று. காதொடிந்த ஊசி அளவும் பரிகாரம் ஏற்படக் காணோம்.

இரண்டாவது திட்டத்திலும் தென்னாட்டிற்குப் புரிந்துள்ள தீமை பற்றி மீண்டும் நிதி அமைச்சர் எடுத்துக்காட்டுகிறார்.

தீமையை எடுத்துக்காட்டுகிற அளவிற்கு, அதை நீக்குவதில் எடுத்துக்கொள்ளும் முயற்சியில்தான் ஒரு அமைச்சரின் கொள்கை பற்றும் திறமையும் அடங்கியிருக்கின்றன.

தீமையை நீக்கவேண்டும் என்ற குறிக்கோளும், நியாயத்திற்குப் போராடி வெற்றி காணவேண்டும் என்ற நல்லுணர்வும் நிதி அமைச்சருக்கு இருக்குமானால் அவர் என்ன செய்யவேண்டும்? தென்னாட்டினருக்கு நன்மைஏற்படுவதை முதல் குறியாகவும், தாம் அமைச்சர் பதவியிலிருப்பதை இரண்டாம் குறியாகவும் அவர் கொள்ள வேண்டும். தென்னாட்டினருக்கு இழைக்கப்பட்டுள்ள கேடு களையப்படுவதற்கு தமது மந்திரி பதவியை விலையாகக் கொடுக்க அவருக்குத் துணிவு ஏற்பட வேண்டும். அப்பொழுதுதான் தென்னாட்டு மக்களுக்காகப் பரிந்து பேசும் நிதி அமைச்சரின் பேச்சில் உண்மை இருப்பதாக நல்லவர்கள் கொள்ளுவர்.

ஆனால் நிதிஅமைச்சர், தென்னாட்டு மக்களின் நலன்களை மீட்டுத் தர, விலையாகப் பதவியைக் கொடுப்பதாக, விளையாட்டிற்குக்கூட கூறத் தயாராக இல்லாதவர். அவருடைய சென்ற காலப் போக்கிலிருந்து இவ்வுண்மையைத்தான் நாம் அறிந்திருக்கிறோம்.

எனவே, அவர் தென்னாட்டு மக்களுக்காகப் பரிவு காட்டுவதும் ஓலமிடுவதும் வெறும் அரசியல் பசப்பேயாகும். ஏற்கனவே, அவர் அவ்வாறு பசப்பினதோடு திருப்திகொண்டு பதவியில் ஒட்டிக்கொண்டு இருப்பவராவார். அத்தகு குணம் பெற்றிருப்பவரை அரசியல் உலகில் ஒரு அவமானச் சின்னம் என்றுதான் அறிவுடையோர் கூறுவர்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம்

பயன் தரும் நிலைமையை ஜெர்மன் நிபுணர்கள் ஆராய்கின்றனர்

சென்னை, பிப். 29—

தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள நெய்வேலி பழுப்பு நிலக்கரிப் படிவப் பிரதேசத்தில் இன்று பெரும் அளவில் தண்ணீர் இறைப்பதற்கான 'பம்பிங்' பரிசோதனைகள் ஆரம்பிக்கப்படுமாம்! கனிகளை வெட்டியெடுத்து உபயோகிப்பதற்கான திட்டத்தை இறுதியாக வகுப்பதற்கு முந்திய பூர்வாங்க பரிசிலனையின் கடைசிக் கட்டம் இதுதானும்!

'நெய்வேலித் திட்டம்தான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவிருக்கிற மிகப் பெரிய தென்னாட்டுத் திட்டம்' என்று சொல்லலாமாம்!

ரூ. 70 கோடி செலவு மதிப்புள்ள இத்திட்டத்தின் மூலம் ஆண்டுதோறும் சுமார் $32\frac{1}{2}$ இலட்சம் டன் பழுப்பு நிலக்கரி நாட்டிற்குக் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கிழக்கு ஜெர்மனியில் கிடைக்கிற பழுப்பு நிலக்கரியை ஒரு மட்டரக 'கோக்' கரியாக மாற்றி அதை உபயோகித்து, உருக்கு தயாரிப்பதற்கு ஒரு புதிய முறை உருவாக்கப்பட்டிருக்கிறது. நெய்வேலி பழுப்பு நிலக்கரியானது ஜெர்மன் பழுப்பு நிலக்கரியைவிட மட்டமானது என்று தோன்றவில்லை. கிழக்கு ஜெர்மன் நிபுணர்கள் நெய்வேலிக்கு வருகை தந்து அங்கு கிடைக்கிற பழுப்பு நிலகிரியை எந்தெந்த வகையில் உபயோகப் படுத்தலாமென்று ஆராய்ந்து வருகிறார்கள்; நெய்வேலி பழுப்பு நிலக்கரியையும், சேலம் இரும்புக் கனிகளையும் உபயோகித்து உருக்கு தயாரிக்க முடியுமா என்றும் அவர்கள் பரிசீலிக்கிறார்கள்.

பழுப்பு நிலக்கரி (லிக்னைட்) என்பது இன்னும் பலருக்கு வெகுவாக தெரிந்திராத ஒன்றாகும். நமக்குக் கட்டை நிலக்கரி முதலியவைகளை எரி பொருளாக உபயோகித்துப் பழக்கமிருக்கிறது. நிலக்கரியானது சோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் காடுகளிலிருந்த கட்டைகளின் வேறு ரூபம்தான்; அவை மேற்படையான மண் வரிசைகளின் அமுக்கத்தில் இறுகி கெட்டிப்பட்ட ஒரு பொருளாகும். கட்டை நிலக்கரி மாறுவதற்குமுன் பல கட்டங்களைத் தாண்டுகிறது.

நெய்வேலியில் சுமார் 100 சதுர மைல் பரப்பளவில் 200 கோடி டன் பழுப்பு நிலக்கரி படிவு இருப்பதாக நிபுணர்கள் மதிப்பிட்டிருக்கிறார்கள். அதைப் பூர்த்தியாக வெட்டியெடுக்கத் தொடங்கியபின் தேசிய பொருளாதாரத்துக்குப் பலவகையில் இந்தக் கனிப் பொருள் உபயோகமாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. பழுப்பு நிலக்கரியை பக்குவப்படுத்தாத நிலையில்கூட எரிபொருளாக உபயோகிக்கலாம்.

இப்போது வேலை நடக்கும் வேகத்தைக் கவனித்தால் 1960-ஜனவரியிலிருந்து கணிசமான அளவு பழுப்பு நிலக்கரி உபயோகத்துக்குக் கிடைக்குமென்று எதிர்ப்பார்க்கலாம்.

பழுப்பு நிலக்கரியை பக்குவம் செய்து சுத்தக் கரியாக்கும்போது வெளிப்படுகிற வாயுக்களை 'ஜிப்சம்' அல்லது 'கந்தகம்' உபயோகித்து இரசாயன உரம் (அம்மோனியம சல்பேட்) தயாரிக்கலாம். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஏராளமான ஜிப்சம் படிந்திருக்கிறது. அதைக் கடலூர் துறைமுகம் வழியாக இறக்குமதி செய்யலாம். 2,00,000 டன் ரசாயன உரம் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துவதும் இந்தப் பல—காரியத் திட்டத்தில் அடங்கியுள்ள ஒரு அம்சமாகும்.

பழுப்பு நிலக்கரியிலிருந்து டீசல் எண்ணெய், பெட்ரோல் முதலியவைகளையும் உற்பத்தி செய்யலாம்; ஆனால், செயற்கை ரீதியான இந்த எரிபொருள்களைத் தயாரிப்பதற்குமுன் அவை சம்பந்தமான உற்பத்திச் செலவு விவரங்கள் பூரணமாக நமக்குத் தெரியவேண்டும்.

இந்தவித உபயோகங்கள் தவிர, பல பேருக்கு வேலையளிப்பு வாய்ப்பு ஏற்படுத்துவதிலும் இந்தத் திட்டம் பயனுள்ள ஒன்றாக இருக்கும்; 5,000—7,000 தொழிலாளர்கள் வரை அதில் ஈடுபடுத்தப்படலாம் அவர்கள் பலதரப்பட்ட தொழிலாளர்களாக இருப்பார்கள். அங்கே ஒரு குடியிருப்பு நகர் ஏற்பட்டபின் வியாபாரிகள் முதலிய பல்வேறு வகையான தொழில்களைச் செய்கிற இன்னும் 3,000 பேர் வாழ்க்கை தேடுவதற்கும் அது வழிசெய்யும்!

பழுப்பு நிலக்கரியை வெறுமனே தோண்டியெடுப்பது சாத்தியமல்ல; பழுப்பு நிலக்கரிப் படிவுகளுக்கு மேலேயுள்ள மண்டபமானது பூமி மட்டத்திலிருந்து கீழே சுமார் 160-250 அடி ஆழம் வரையில் செல்வதாலும், பழுப்பு நிலக்கரிப் படிவின் சராசரி கனம சுமார் 55 அடியாக இருப்பதாலும், தண்ணீர் இறைப்பதற்கான பம்புக் கிணறுகளை பூமிக்குகீழ் 400 அடி ஆழம் வரையில் செல்வதாகத் தோண்ட வேண்டும். எல்லாத் தண்ணீரையும் வெளியேற்றுவதற்கு அவசியமுமில்லை—அது சாத்தியமுமில்லை. கனி வெட்டி எடுக்கும் இடத்தில் மாத்திரம் பழுப்பு நிலக்கரி அடிப்படைக்குக் கீழே சுமார் 50 அடி ஆழத்துக்கு தண்ணீர் மட்டத்தைத் தாழ்த்திவிட்டால் போதும்; அதன் மூலம், தண்ணீரின் அமுக்கத்தைக் குறைக்கலாம். அதன் பிறகு பழுப்பு நிலக்கரியை வெட்டி எடுப்பதில ஆபத்து இருக்காது.

இந்தப் பூர்வாக வேலை சிக்கலும், சிரமமும் உள்ளதாக இருந்தபோதிலும் பூர்வாங்க பரிசீலனை பூர்த்தியாகிவிட்டது ஆனால், இறுதியாக திட்ட வேலை துவக்குமுன் கடைசி முறை சரிபார்த்து வேலைசெய்வது உசிதமென்று கருதப்படுகிறது. குறிப்பிட்ட சில துளைகளில் தண்ணீரை பம்பு மூலம் இறைத்துத் தண்ணீர் மட்டத்தை தாழ்த்தி நிபுணாகள் ஆராய்ச்சி நடத்தியிருக்கிறாகள்; அதன மூலம் சில விஷயங்கள் தெரியவந்திருக்கின்றன.

சாதாரணமாய் சுரங்க வேலை நடத்துவதற்கான முறைப்படி குறிப்பிட்ட பரப்பளவில், திறந்த ரீதியில் கனி வெட்டியெடுக்க வேண்டுமானால், நிமிடத்திற்குச் சுமார் 20,000 காலன் தண்ணீரை பம்பு செய்யவேணடும்; இந்த வேலையைச் சுமார் 100 தினங்களுக்கு நடத்திவர வேண்டும். அந்தத் தண்ணீரானது பழுப்பு நிலக்கரிப் படிவங்களுக்குக் கீழேயிருந்து மேலே கொண்டுவரப்பட வேண்டும்.

இந்த இறுதிப் பரிசீலனை பிப். 29-ந் தேதி காலையில் ஆரம்பித்து வைக்கப்படும். ஒவ்வொன்றும் நிமிடத்துக்கு 1,000 காலன் வீதம் இறைக்கிற 20 பம்புகள் இந்த இறுதிப் பரிசீலனையில் ஈடுபடும். பூர்வாங்க வேலையில் பல கஷ்டங்கள் ஏற்பட்டன. 26—27 அங்குல குறுக்களவுள்ள குழிகளை சுமார் 400 அடி ஆழத்துக்குத் தோண்டுவதென்றால் சுலபமல்ல; அதற்கு அதிக நேரம் பிடிக்கும். இதற்கான துளைப்புக் கருவிகளை (டிரில்) வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது. துளை போட்டபின் துளைகளுக்குள் உருக்குக் குழாய்களை இறக்கிப் பாதுகாக்க வேண்டும். பிறகு பம்பு செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இதற்கான ஊழியர்களுக்கு அந்த இடத்திலேயே பயிற்சி அளிக்கவேண்டும். சுமார் 12 பெரிய பம்புகளை உபயோகிப்பதன் மூலம் தண்ணீர் மட்டம் திருப்திகரமான அளவுக்குக் குறைந்திருக்கிறது.

இப்போது 16 பம்புகள் தயாராயுள்ளன—இன்னும் 4 பம்புகள் சீக்கிரம் கிடைக்கும்.

நாட்டின் பொருளாதாரத்துக்கும், முக்கியமாக சென்னை மாநிலத்தின் அபிவிருத்திக்கும், விசேட நன்மை செய்யக்கூடிய ஒரு திட்டம் சம்பந்தமான பூர்வாங்க பரிசீலனையின் இறுதிக்கட்டம் இன்று துவங்குகிறது திட்டம் ஆரம்பமானால் ஒரு 'புதையல்' நமக்குக் கிடைத்தது போலாகும்; சிரமத்தைப் பார்க்காமல் உழைக்கும் மனிதர்களுக்குப் பரிசளிப்பதற்காகவே இந்தப் புதையல் பல கோடி ஆண்டுகளுக்குமுன் பூமிக்குக்கீழ் புதைத்து வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லலாம்.

பிப்ரவரி 20-பெற்ற பெருவெற்றி

தமிழகம் தரும் நற்செய்தி

தமிழகம் கண்டறியாத பொது வேலைநிறுத்தம், கடையடைப்பு கடந்த பிப். 20-ல் நடைபெற்றது. வரலாற்றுச் சிறப்புக்குரிய அந்த மகத்தான சம்பவம், தமிழகத்தின் பட்டிதொட்டிகளில் எல்லாம் நடைபெற்றுள்ள விபரங்கள் நமக்குக் கிடைத்தவண்ணமுள்ளன; அவற்றினை முடிந்தவரையில் சுருக்கித் தந்து வருகிறோம்.

சிறு சிறு கிராமங்களில்கூட விவசாயிகள் எல்லாம் வேலைக்குச் செல்லாதிருந்திருக்கின்றனர்; அறுவடைகூட அன்று பல ஊர்களில் நடைபெறவில்லை.

பொங்கிவழிந்த ஆர்வத்தோடு, பிப். 20—பொது வேலை நிறுத்தம் நடைபெற்றிருப்பதை இந்த நிகழ்ச்சிச் சுருக்கங்கள் சொல்லுகின்றன.

பொத்தனூர்

முழு வேலைநிறுத்தம் நடைபெற்றது; அன்று மாலை 7 மணிக்கு கழகக் கட்டிடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உறுதி மொழிகளைப் படித்துக்காட்டி உறுதி செய்யப்பட்டது.

அன்பில்

எல்லாக் கடைகளும் மூடப்பட்டன; மாணவர்கள் பள்ளிக்குச் செல்லவில்லை; பொது மக்களின் ஒத்துழைப்பினால், அர்த்தால் அமைதியாக நடைபெற்றது.

அவனியாபுரம்

கடையடைப்பும், பொதுவேலை நிறுத்தமும் அமைதியாக நடைபெற்றது; பஸ் நிலையத்தில், பொதுமக்களைப் பஸ்ஸில் ஏற வேண்டாமென்று கேட்டுக் கொண்ட கூட்டணித் தோழர்களைப் போலீசார் பிரம்பால் அடித்துக் கைது செய்தார்கள்.

கைது செய்யப்பட்டத் தோழர்கள்:— வி வன்னியன், கே. சி. துசிமுத்து, த தங்கவேலு, பொன்னையா, நடராசன், இருளப்பன், கருப்பையா, நல்லதம்பி, ராசு, சுப்பையா, ராமு, சண்முகம், லட்சுமணன் ஆகியோர்.

சேவூர் (வ. ஆ.)

காலை 7 மணிக்கு கழக நிலையத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு மாவட்ட ஆட்சி மன்ற ஆரம்பப் பள்ளிக்கு சென்றது. பள்ளிக்கு ஒரு மாணவர்கள்கூட போகவில்லை; எ. எ எம். பள்ளியில் விடுமுறை விட்டுவிட்டனர். பெரும்பாலான கைத்தறி நெசவாளர்கள் அன்று பாவு போடவில்லை; கடைகள் திறக்கப்படவில்லை; ஊராட்சி மன்ற அலுவலகமும் மூடிக் கிடந்தன மாலை 5 மணிக்கு ஊர்வலம் புறப்பட்டு கழக நிலயத்தை அடைந்ததும் உறுதி மொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது

பாண்டியூர்

இவ்வூரிலும், சுற்றுப்புற கிராமங்களான செங்கைகொண்டான், கொல்லனூர், வலசை, அரசடி வண்டல் முதலிய கிராமங்களில் கடையடைப்பும், உழவு வேலை நிறுத்தமும் நடைபெற்று, ஊர்வலமாகச் சென்று பொதுவேலை நிறுத்தத்தின் நோக்கங்கள் பற்றி விளக்கவுரையாற்றப்பட்டது.

நெடும்பலம்

கடையடைப்பும் பொதுவேலை நிறுத்தமும் சிறப்பாக நடைபெற்றது. விவசாயிகள் வேலைக்குச் செல்லவில்லை; மாணவர்களும் பள்ளிக்குப் போகவில்லை.

நீடாமங்கலம்

மாலை 5 மணிக்கு நீடாமங்கலம் வெண்ணாறு பாலக்கரையிலிருந்து விவசாயிகளும், தொழிலாளர்களும், பொது மக்களும் பெருவாரியாகக் கலந்துகொண்ட ஊர்வலம் புறப்பட்டு நான்கு முக்கிய வீதிகளின் வழியாக சென்று சீனிவாச பிள்ளை சத்திரத்தடியில் முடிவுற்றது.

அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ப. சந்தானம் தலைமை வகித்தார். தோழர்கள் எஸ் எம் வைத்தியலிங்கம், பி. வெங்கடேசன் எம். எல். ஏ, சோ. சச்சிதானந்தம், இலரா, மாரி, மதிவாணன் ஆகியோர் பேசினர் உறுதிமொழி எல்லோராலும் ஏற்கப்பட்டது.

திசையன் விளை

கதவடைப்பு, பொது வேலை நிறுத்தம் அமைதியாக நடைபெற்றது. தி. மு. க. பணிமனையில் கூடியிருந்த மக்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்; தோழர்கள் பலர், ஒத்துழைப்புத் தந்தோருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

நாமகிரிப்பேட்டை

எல்லாக் கடைகளும், மில்களும் முழு வேலை நிறுத்தம் செய்தது; மாலை 5 மணிக்கு சின்னயஞ்சாவடி மைதானத்தில் ஓர் பொதுக்கூட்டம் தோழர் கே வைத்தியலிங்கம் தலைமையில் நடைபெற்று தோழர்கள் சி. முத்து கிருட்டிணன், எஸ். அலாவுதீன் ஆகியோர் பேசினர் உறுதிமொழி வாசிக்கப்பட்டு உறுதி எடுத்துக்கொள்ளப்பட்டது

ஆங்கியம்

இங்குள்ள எல்லாக் கடைகளும் அடைக்கப்பட்டன; பொது வேலை நிறுத்தம் அமைதியாக நடைபெற்றது.

லோவர் ஷேக்கல்முடி

தோழர் முருகன் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டது கடைகள், பள்ளிகள், கைத்தொழிற்சாலைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டன ஊர்வலம் 11 மணிக்கு முடிவுற்றது.

விளாப்பாக்கம்

அமைதியாகப் பொது வேலை நிறுத்தம் நடைபெற்றது. அன்று மாலை ஊர்வலமும் நடைபெற்ற பின், உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது.

பண்ணைக்காடு

அமைதியான முறையில் வேலை நிறுத்தம் நடைபெற்றது. 'வேலை நிறுத்தம் கூடாது' எனக் கூறிய காங்கிரசுக் கட்சியினரும் வேலை நிறுத்தம்செய்தது குறிப்பிடத்தக்கதாகும்.

தோலி வட்டம்

விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரும் வேலைக்குச் செல்லவில்லை. மாலை 5 மணியளவில். தோழர் ப. காத்தான் தலைமையில் ஊர்வலமாகச் சென்று, திரௌபதை அம்மன் கோயிலருகில், தி மு. க. செயலாளர் வை நமசிவாயம் தலைமையில், தோழர்கள் கே வி. சுப்பிரமணியம் அ. தருமலிங்கம் சு. வைரக்கண்ணு ஆகியோர் பேசிய பின், உறுதிமொழி மேற்கொள்ளப்பட்டது.

நாகலாபுரம்

சர்வகட்சி ஊர்வலம் காலை 10-மணிக்கு நடைபெற்றது. சந்தைபேட்டையில் தோழர் எஸ் முத்தையா தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எம். குருசாமி கே. எஸ். பொன்னையா, ஜி வெங்கட்ராமன், ஏ. குருசாமி ஆகியோர் பேசினர். வர்த்தகர்கள் கடையடைப்பு செய்தனர்; கல்வி நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. அர்த்தால் அமைதியாக நடைபெற்றது.

அம்மையப்பன்

இங்கு முழு கடையடைப்பும், வேலை நிறுத்தமும் நடைபெற்றது. சிலர் எதிர்ப்பிரச்சாரம் செய்தும் அமைதியாகவே அர்த்தால் நடைபெற்றது.

வேடிச்சிபாளையம்

இங்கு கடைகள் அனைத்தும் மூடப்பட்டன; பெரும்பாலான விவசாயத் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லவில்லை. அமைதியான முறையிலே வெற்றிகரமாக அர்த்தால் நடைபெற்றது. இவ்வூரில் தி. மு. கழகம் ஒன்றே போராட்டத்தில் கலந்துகொண்டது.

புதுப்பட்டி

எல்லாக் கடைகளும் அடைக்கப்பட்டது; பெரும் பகுதி மாணவர்கள் பள்ளிக்குச் செல்லவில்லை; ஊரில் தடையுத்தரவு அமுல் செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாகவும், ஊர்வலம், பொதுக்கூட்டத்திற்கு அனுமதி பெறுமையினாலும், மாலை நடைபெறவிருந்த ஊர்வலமும்,—பொதுக்கூட்டமும் நிறுத்தப்பட்டன.

கவுந்தப்பாடி

நகரிலுள்ள கடைகள் அனைத்தும் திறக்காமலிருந்தன; முன்னாள் கிராம காங்கிரஸ் தலைவர் உள்பட சராப்பு வர்த்தகர் (காங்கிரஸ்காரர்) அனைவரும் கடையடைப்பு செய்தனர். நான்கு தேசியத் தோழர்களின் கடை தவிர நகரிலுள்ள கடைகள் அனைத்தும் திறக்கவில்லை. மாலை 5 மணிக்கு சர்வ கட்சி கூட்டணி சார்பில் இரா. துரை தலைமையில் மாபெரும் ஊர்வலம் முக்கிய தெருக்களின் வழியாக சந்தப்பேட்டை திடலை அடைந்தது; அங்கு உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

காரிப்பட்டி

வியாபாரிகள் பூரண கதவடைப்பு செய்தார்கள்; சர்வ கட்சி கூட்டணி உறுதிமொழி வாசிக்கப்பட்டது. அர்த்தால் அமைதியாக நடைபெற்றது.

பாலசமுத்திரம்

இங்கு அர்த்தால் அமைதியான முறையில் நடைபெற்றது.

திருமனூர்

இவ்வூர் பொது மக்கள் ஒத்துழைப்புடன் ஊரில் உள்ள கடைகளும் மூடப்பட்டு, அமைதியாக அர்த்தால் நடைபெற்றது.

பாவூர்சத்திரம்

எவ்விதச் சம்பவமுமின்றி, அர்த்தால் இங்கு அமைதியாக நடைபெற்றது.

அறந்தாங்கியில் அச்சகங்களும் தொழிற்சாலைகளும் மூடப்பட்டன

காங்கிரஸ்காரர்களும் கடையடைப்புசெய்தனர்

முழு பொதுவேலை நிறுத்தம் நடைபெற்றது. மில்கள், அச்சகங்கள், சோப்புத் தொழிற்சாலைகள், காபி ஒட்டல்கள் முதலிய எல்லாக் கடைகளும் கட்டுப்பாட்டுடன் அடைக்கப்பட்டன; நகரிலுள்ள காங்கிரஸ்காரர்கள் எல்லோரும் கடையடைத்தனர்.

மாலை நான்கு மணியளவில் புகைவண்டி நிலயத்திலிருந்து புறப்பட்ட ஊர்வலத்திற்கு, தோழர்கள் இராம. அசோகன், இராமசாமித் தேவர் இருவரும் தலைமை வகித்து நடத்திச் சென்றனர். ஊர்வலம் வ உ. சி. திடலுக்குச் சென்று, உறுதிமொழி எடுத்துக்கொண்டபின் கலைந்தது.

எருமைப்பட்டி

இவ்வூர் சர்வகட்சி கூட்டணி சார்பில் அர்த்தால் அமைதியுடன் நடைபெற்றது.

கொண்டம்பட்டி

சுற்றுவட்டத்திலுள்ள எல்லா பலசரக்கு கடைகளும், உணவு விடுதிகளும் மூடப்பட்டன; உயர்தர பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் பள்ளிக்கு போகாமல் நின்றுவிட்டனர். அன்று மாலை, ஊர்வலமாக — 'பெரியார்' திடலுக்கு வந்து, உறுதி மொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

புத்திரகவுண்டன் பாளையம்

முழு அர்த்தால் நடைபெற்றது. கடைகளும், தேநீர் விடுதிகளும், அரிசி மில்களும் மூடப்பட்டன; யாதொரு குழப்பமுமின்றி அர்த்தால் நடைபெற்றது.

செம்பனூர்கோயில்

முழு கடையடைப்பு நடைபெற்றது. விவசாயிகள் அன்று வேலைக்குப் போகவில்லை; சினிமா நடைபெறவில்லை.

மாலை நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் பி. எஸ். கணேசன், கே. ஆர். சம்பந்தம், எம். எல். ஏ, கோ. சி. மணி, குருசாமி ஆகியோர் பேசினர். உறுதி மொழி எடுத்துக் கொண்ட பின் கூட்டம் கலைந்தது.

பாப்பாரப்பட்டி

வியாபாரம் அனைத்தும் நிலை நின்றுவிட்டது; சினிமாக் காட்சிகள் நடைபெறவில்லை; அன்று ஓர் மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது; தோழர் பி. எஸ். முருகேசன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எம். எஸ். முத்தக்குப்பன், பி. லோகநாதன் ஆகியோர் பேசினர். தோழர் சஞ்சப்பன் உறுதி மொழியை வாசித்தபின் கூட்டம் கலைந்தது.

அருப்புக்கோட்டை

நகரில் இதுவரையில் நடைபெற்றிராத அளவில், தொழிலாளர்கள், வியாபாரிகள், மாணவர்கள், விவசாயிகள் ஆகியோர் முழு வேலை நிறுத்தம் செய்தனர். மாலை 4 மணிக்கு திருநகரத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு முக்கிய வீதிகள்தோறும் சென்று பொதுக்கூட்டம் நடக்கவேண்டிய தெற்குத் தெருவை அடைந்தது. ஊர்வலத் தொண்டர்கள் அணிவகுப்பு ஒரு மைல் நீளமிருந்தது. தோழர் பி. குட்டப்பன் தலைமையில் தோழர்கள் பி. பி. என். நல்லதம்பி, பி. திருநாராயணன், பி. எஸ். சங்கரலிங்கம் எம். எஸ். இசாமசாமி ஆகியோர் பேசினர். இதை ஆதரித்த மக்களனைவரும் உறுதிகூறக் கூட்டம் இரவு 10 மணிக்கு அமைதியாகக் கலைந்தது.

சுப்பிரமணியபுரம்

கடைகள் யாவும் அடைக்கப்பட்டுக்கிடந்தன; அரிசி மில்கள் ஓடவில்லை; பள்ளிக்குப் பெரும்பான்மையான மாணவர்கள் செல்லவில்லை; ஆயிரத்திற்கு மேற்பட்ட விவசாயப் பெருமக்கள் வேலைக்குச் செல்லவில்லை. காங்கிரஸ் கட்சியினர் உள்பட எல்லோரும் வேலை நிறுத்தத்தில் ஒத்துழைத்தனர்.

அகரம்

பொது வேலைநிறுத்தமும், கடை அடைப்பும் நடைபெற்றது; இரவு 8 மணிக்கு, தோழர் இல. பால் பாண்டியன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் எம். இராசபாண்டியன், எம். எம். மணி ஆகியோர் பேசிய பின் உறுதிமொழி வாசிக்கப்பட்டு கூட்டம் முடிந்தது.

திருவரம்பூர்

இங்குள்ள சில கடைகள் தவிர்த்து, பெரும் பகுதியான கடைகள் மூடப்பட்டன. அனைவரும் பொது வேலைநிறுத்தத்தில் பங்கு கொண்டனர்.

கொண்டயம்பட்டி

கடைஅடைப்பு — பொதுவேலை நிறுத்தமும் நடைபெற்றது. தி. மு. க. தொண்டர்கள் 17 பேர் கைது செய்யப்பட்டு மாலை 6-30க்கு விடுதலை செய்யப்பட்டனர். மாலை 7-30 மணிக்கு தோழர் இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் சு. பெ. ரா. மலைச்சாமி, சி. பாலுச்சாமி ஆகியோர் பேசினர்; பின்னர் உறுதிமொழி மேற்கொள்ளப்பட்டது.

கைது செய்யப்பட்ட தோழர்கள்:— பாலுச்சாமி, எஸ். துரைச்சாமி, பெ. துரைச்சாமி, ஆர். கருப்புச்சாமி, எஸ். ரெங்கசாமி, ஆர். பொன்னுச்சாமி, பி. உதயகிரி, எஸ். கருணாநிதி, கோவிந்தன், சந்து, நவநீதன், பெ. கிருஷ்ணன், சோ. வெள்ளைச்சாமி, சுப்பையா, எஸ். கிருஷ்ணன், காளியப் பிள்ளை அய்யாவு ஆகியோர்.

மாப்படுகை

இதுவரையில் நடந்திராத வகையில் இங்கு கடையடைப்பு செய்யப்பட்டு, அர்த்தால் வெற்றிகரமாக நிறைவேறியது.

வையம்பட்டி

கடையடைப்பும், வேலை நிறுத்தமும் இங்கு அமைதியாக நடைபெற்றது.

****

தலைமைக் கழகம்: அறிக்கை—5/56

உறுப்பினர் சேர்த்தல்

பொது வேலைநிறுத்தம் பற்றிய பணிகளில் கழகத் தோழர்கள் தீவிரமாக ஈடுபட வேண்டி நேர்ந்ததாலும், உறுப்பினர் சேர்க்கும் காலம் மேலும் சிறிதளவு நீடிக்க வேண்டும் என்று பல கிளைகள் விரும்பும் காரணத்தாலும் உறுப்பினர் சேர்க்கும் காலம் **18—3—56** வரையில் மட்டுமே நீடிக்கப்படுகிறது.

மார்ச்சுத் திங்கள் 12-ஆம் நாளிலிருந்து 18-ஆம் நாள் வரையில் உள்ள ஒரு வாரத்தை உறுப்பினர் சேர்க்கும் வாரமாகக்கொண்டு தகுதியுள்ள மிகவான உறுப்பினர்களைச் சேர்க்கும் பணியில் மும்முரமாக ஈடுபடும்படி கிளைக் கழகங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறோம்.

18—3—56-ஆம் நாளை உறுப்பினர் சேர்ப்பதற்கான இறுதி நாளாகக்கொண்டு, 31-3-56-க்குள் உறுப்பினர் சேர்க்கும் விண்ணப்பத் தாள்களைத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கும்படி கிளைக் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

உறுப்பினர்க்குச் சேரவேண்டிய உரிமைச் சீட்டுக்களும், கிளைக் கழகம்—மாவட்டக் கழகம் ஆகியவற்றிற்குச் சேரவேண்டிய உரிமைச் சீட்டுக்களும் மார்ச்சு 15-ஆம் நாளுக்குமேல் தொடர்ந்து தலைமைக் கழகத்தால் அனுப்பி வைக்கப்பெறும்.

'அறிவகம்'
29—2—56
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

****

மத்திய சர்க்கார் அனுமதியுடன் தமிழ்நாட்டில் 4 நூற்பு மில்களாம்!

தூத்துக்குடி சோடா உற்பத்தி ஆலையில் வேறு மாநிலத்தவர் பங்குதாரர்களா?

சென்னை சட்டசபையில் மந்திரி பக்தவத்சலம் மழுப்பல்

சென்னை, பிப். 28—

சென்னை மாநிலத்தில், திருநெல்வேலி மாவட்டத்தில் புதிதாக 4 மில்கள் ஏற்படுத்த இந்திய சர்க்கார் 'அனுமதி' வழங்கியுள்ளனராம்!

அந்த மில்களின் மொத்தக் கதிர்கள் 44,000.

அன்றியும் அதே மாவட்டத்தில் தற்போதுள்ள இரண்டு மில்கள் அதிகப்படியாக 16,000 கதிர்களை அதிகரித்துக்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளதாம்.

சோடா உற்பத்தி ஆலை

தனி நபர் துறையில் அனுமதிக்கப்பட்டுள்ள முக்கிய தொழில்கள் வருமாறு:—

தூத்துக்குடியில் தினம் 5 டன் காஸ்டிக் சோடா உற்பத்தி செய்யக்கூடிய ஆலை; அதே நகரில், வருடம் 22,800 டன் காஸ்டிக் சோடாவும், 72,000 டன் சோடா உப்பும் உற்பத்தி செய்யக்கூடிய ஆலை.

காகித உற்பத்தி ஆலை

அம்பாசமுத்திரம் அருகில் வருடம் 10,000 டன் காகிதம் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு காகித ஆலை; சாதாரண அச்சுக் காகிதம், எழுதும் காகிதம் இங்கு உற்பத்தி செய்யப்படும்.

மாநில சர்க்காரின் சிபாரிசின் மீது மத்திய சர்க்கார் அனுமதியுடன் திருநெல்வேலி மாவட்டத்தில் ஏற்படுத்தப்படும் மேற்கண்ட தொழில்களின் விவரம் வருமாறு:—

நூற்பு மில்கள்:

தென்னிந்திய கூட்டுறவு நூற்பு மில்; நெல்லை காட்டன் மில்; ராமலிங்கா மில்; (மேலச் சேவல்); புதுக்கோட்டை கம்பெனி லிமிடெட்.

ரசாயனத் தொழில்கள்:

தூத்துக்குடி ஹெவி கெமிக்கல்ஸ் லிமிடெட்; தூத்துக்குடி அருகில் தாரங்கதாரா கெமிக்கல் ஒர்க்ஸ் லிமிடெட்.

காகித ஆலை:

அம்பாசமுத்திரம் அருகில் பாபநாசம் காகித மில்.

நூற்புக் கதிர்களின் தொகை அதிகரிப்பு அனுமதிக்கப்பட்டுள்ள மில்கள் வருமாறு:—

திருநெல்வேலி, ஸ்ரீ கணபதி மில்—கதிர்கள் தொகை 6000-லிருந்து 12,000 ஆக அதிகரிப்பு; தூத்துக்குடி, ஸ்பின்னிங் மில்; தூத்துக்குடி — 6,000 லிருந்து 16,000 ஆகக் கதிர்கள் அதிகரிப்பு.

சிமெண்ட் உற்பத்தி அதிகரிப்பு

இந்தியா சிமெண்ட் லிமிடெட், அதனுடைய உற்பத்தி சக்தியை வருடம் 1,15,000 டன்களிலிருந்து 2,17,000 டன்களாக அதிகப்படுத்தவும் மத்திய சர்க்காரால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை சட்டசபையில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் இவ்விவரங்களைத் தெரிவித்த தொழில் அமைச்சர் பக்தவத்சலம், மேற்கொண்டு எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"மேற்சொன்ன தொழில்கள் அனைத்துமே தனி நபர் துறையைச் சேர்ந்தவையே; அவற்றில் சிலவற்றில் சர்க்கார் பங்கு கொள்ளலாம்; 'தாரங்கதாரா கெமிக்கல் ஓர்க்ஸ்' தவிர பாக்கித் தொழில்கள் அனைத்தும் தென்னிந்தியத் தொழிலதிபர்களாலேயே ஆரம்பிக்கப்படுகின்றன."

கே: 'அம்பர் சர்க்கா'வை விருத்தி செய்ய வேண்டுமென்று சர்க்கார் ஒருபுறம் கூறிக்கொண்டிருக்கையில், அதிகப்படியாக 60,000 நூற்புக் கதிர்களுக்கு அனுமதியளித்துள்ளனர்; சர்க்காரின் சரியான கொள்கைதான் என்ன?

ப: "சரியான நிலைமை என்ன என்பது எனக்குத் தெரியாது; அம்பர் சர்க்காவுக்கு ஊக்கமளிக்கவே சர்க்கார் விரும்புகின்றனர்; இதற்கான சாத்தியங்களையும் பரிசீலித்து வருகின்றனர். அதே சமயத்தில் கைத்தறிகளுக்கு இன்னமும் நூல் தேவையிருப்பதை சர்க்கார் அறிவர்; எனவே, மில்களின் கதிர்கள் தொகை அதிகரிப்புக்கும், புது மில்கள் திறக்கவும் சர்க்கார் சிபாரிசு செய்து வந்துள்ளனர்.

"தாரங்கதரா நிறுவனத்தின் பங்குதாரர்கள் அனைவரும் வேறு மாநிலத்தவர்களா என்பது எனக்குத் தெரியாது; ஆனால், பலரோ அல்லது சிலரோ வேறு மாநிலத்தவர் என்பது மட்டும் தெரியும். அதில் உற்பத்தி இன்னும் ஆரம்பமாகவில்லை. இந்த நிறுவனத்தில் சர்க்கார் ரூ. 10 இலட்சத்துக்குப் பங்குகள் வாங்கியுள்ளனர். இத்தொழிலை ஆரம்பிக்க சென்னைவாசிகள் முன்வந்திருந்தால் சர்க்கார் சலுகை காட்டியிருக்கக்கூடும். சர்க்காரே இத் தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்று திட்டக் கமிஷனும் விரும்பவில்லை; சர்க்கார் கருத்தும் அதுதான்."

ஓடக்கூடாத பஸ்கள் ஓடுகின்றனவாம்!

பஸ் போக்குவரத்தில் சென்னை சர்க்காருக்குக் கிடைத்த இலாபம்

கொய்னா தயாரிப்பில் நஷ்டம்

சென்னை, பிப் 27—

சென்னை சர்க்கார் பொறுப்பேற்று நடத்தும் வர்த்தக நிறுவனங்களின் அலுவல் பற்றிய விவரங்கள் விளக்கப்பட்டுள்ளது.

சென்னை சர்க்கார் பஸ் போக்குவரத்தை ஏற்று நடத்தத் துவங்கியது முதல் 1954—55-ம் ஆண்டு வரையில் கிடைத்த மொத்த இலாபம் ரூ. 83,08,900; தேய்மான நிதியில் ரூ. 55,83,194 இருக்கிறது பென்ஷன், ஓய்வு, ஆகியவைகளுக்காக ரூ. 9,85,024 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

முந்திய ஆண்டில் 381 பஸ்கள் இருந்தன; 1954—55-ல் புதிய பஸ்கள் சேர்க்கப்பட்டதால், அதன் எண்ணிக்கை 402 ஆக உயர்ந்தது; ஆனால், இவற்றில் 302 பஸ்கள் 1947—48-ம் ஆண்டில் வாங்கப்பட்டவை; சாதாரணமாக 1,50,000 மைல்கள் ஓடவேண்டிய அவைகள் 2,80,000 மைல்கள் வீதம் ஓட்டப்பட்டுள்ளன.

பஸ் போக்குவரத்து நிர்வாகச் செலவு 1955-56-ல் 1,45,00 000, 1956-57-ல் ரூ. 1,42,98,200 ஆக இருக்கும்.

1955-56-ல் டிரைவர்கள், கண்டக்டர்கள் வகையறாக்களின் ஊதியமும், 'பேட்டா'வும் ரூ. 25-இலட்சம்; பெட்ரோல் டீசல் எண்ணெய் ரூ 22-இலட்சம் மோட்டார் வரி ரூ. 15-இலட்சம் ஆகியவை பிரதானச் செலவுகளாக இருக்கும்; 1956-57 ல் இச்செலவுகள் முறையே ரூ. 27½-இலட்சம்; ரூ 22-இலட்சம்; ரூ 15-இலட்சமாக இருக்கும்.

பஸ்களின் மூலதனம் (1955 மார்ச் 31-ந் தேதிவரை) ரூ 51,05,968; மூலதனத்திற்கு அனுமதிக்கப்படும் வட்டி 1955-56-ல் ரூ. 2,46,500; இது, 1956-57-ல் ரூ 2,48 400 ஆக உயரும்.

கோழிக்கோட்டிலுள்ள கேரளா சோப் தொழிற்சாலையில் நிகர இலாபம் ரூ. 80,000 ஆக இருந்து வருகிறது.

கோழிக்கோட்டிலுள்ள வனஸ்பதி தொழிற்சாலையில் நிகர இலாபம் ரூ 4,24,965.

சென்னையிலுள்ள சர்க்கார் எஞ்சினியரிங் 'ஒர்க்ஷாப்' கணக்கிலும் நடைமுதல் ஆண்டில் ரூ. 27,950 இலாபமிருக்கலாம்.

சென்னை பால் தொழிற்சாலையில் 1955-56-ல் ரூ. 29 188 நஷ்டம் எதிர்பார்க்கப்படுகிறதாம்; அடுத்த ஆண்டில் ரூ. 17,000 இலாபத்திற்குத் திட்டமிடப்படுகிறதாம்.

கொய்னா தயாரிப்பில், 1955-56-ல் ரூ 2,23,592 நஷ்டம் எதிர்பார்க்கப்பட்டதாம்: ஆனால் ரூ. 1,19 346 ஆகக் குறையுமாம்! 1956-57-லும ரூ 1,46,246 நஷ்டம் ஏற்படுமாம்.

கொள்ளேகால் பட்டுத்தொழில் நிறுவனத்தில் நடைமுதல் ஆண்டில் ரூ 2,500 இலாபமாம்! 1956-57-ல் ரூ 25,000 இலாபம் எதிர்பார்க்கப்படுகிறதாம்!

மாநில சீரமைப்பு நகல் மசோதா

தாமதத்திற்குக் காரணம் என்ன?

புதுடில்லி, பிப். 28—

பஞ்சாப் பற்றிய முடிவையும் மாநில சீரமைப்பு மசோதாவில் சேர்த்துவிட வேண்டுமென்று பிரதமர் நேரு விரும்புவதால், மார்ச் 10-ந் தேதிக்கு முன்னதாக மசோதா தயாராகாதெனத் தோன்றுகிறதாம்!

பிப். 29-ந் தேதியன்று மாநில சீரமைப்பு நகல் மசோதா எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டு விடுமென்று எதிர்பார்க்கப்பட்டது.

மசோதாவின்மீது மாநில சட்டசபைகள் தம் கருத்தைத் தெரிவிக்க ஒரு மாதம் அவகாசம் தரப்படும்.

இந்திய எல்லைகளில்......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

103 தடவைகளும், திரிபுரா, பஞ்சாப் எல்லைகளில் முறையே 12 11 தடவைகளும் பாகிஸ்தானியர் தாக்குதல் நடைபெற்றிருக்கின்றனவாம்.

656 தடவை நடைபெற்ற இத்தாக்குதலின் விளைவாக இந்தியக் குடிகளுக்கு ரூ 3,85,430 சேதம் ஏற்பட்டதெனவும், 95 பேர்வரையிலும் கடத்தப்பட்டுள்ளனர் என்றும் புள்ளிவிவரம் தரப்பட்டிருக்கிறது.

புஞ்சைப்புளியம்பட்டியில் 'போலீஸ் தர்பார்'

கைது செய்யப்பட்ட தோழர்கள் நிலை

இந்நகரில் உள்ள மூன்று ஜின்னிங் பேக்டரிகளும் மூடப்பட்டன; எல்லாக் கடைகாரர்களும் அர்த்தாலில் ஈடுபட்டனர்.

63 தோழர்களைக் கைது செய்து இரண்டு பேர்களை மட்டும் உள்ளூர் போலீஸ் நிலையத்தில் வைத்துக்கொண்டு, மற்றவர்களை போலீஸ் வண்டியில் ஏற்றி சத்தியமங்கலம் கொண்டு சென்றனர். 20-ந் தேதி மாலை 6 மணி வரை போலீஸ் நிலையத்தில் வைத்திருந்துவிட்டு, 61 பேரில் 50 பேரை வெளியே அனுப்பிவிட்டனர்; 11 தோழர்களை மார்ச் 5-ந் தேதி வரை 'ரிமாண்டு' செய்து சப்-ஜெயிலில் வைத்துள்ளனர்; மற்ற 50 தொண்டர்கள் சத்தியமங்கலத்திலிருந்து கால் நடையாகவே புளியம்பட்டி வந்து சேர்ந்தனர். இரவு 9 மணிக்கு புளியம்பட்டி போலீஸ் நிலையத்தில் இருந்த இரு தொண்டர்களையும் விட்டுவிட்டனர்.

கீழப்பழுவூர்:

கீழப்பழுவூரில் தி. மு கழகத் தோழர்களால பிப்ரவரி 20-ல் விளக்கப் பொதுக்கூட்டம் 18—2—56ல் நடைபெற்றது. விளக்க நோட்டீஸ்களும் போட்டு விளம்பரம் செய்யப்பட்டது. பொதுமக்களும் கலந்து அர்த்தாலை ஆதரித்தனர். அதற்கிணங்க 20—2—56ல் கடைகள், மூடப்பட்டிருந்தன; பள்ளி மாணவர்களும் பள்ளிக்குச் செல்லவில்லை அர்த்தால் வெற்றிகரமாக நடைபெற்றது.

காலை 8 மணி அளவில் தி மு.க. துணைச் செயலாளர் ம இராசுவை போலீசார் கைது செய்து ஜெயங்கொண்டம் அனுப்பி; 14 நாள் ரிமாண்டில் வைத்தனர்.

மேலப்பழுவூர் தோழர்களான எம். ஆர். செல்லப்பா, சுந்தரராசு ஆகியோர் கைது செய்யப்பட்டு, ரிமாண்டில் ஜெயங்கொண்டத்தில் வைத்துள்ளனர்.

அரியலூர்:

பிப். 20-ந் தேதி இரவு 10 மணிக்கு தி. மு. க. செயலாளர் கோ. சிவப்பெருமான், சுரங்கத் தொழிற்சங்கத் துணைச் செயலாளர் தோழர் இராமசாமி இருவரையும் போலீசார் கைது செய்தனர்.

மணமேடு:

பிப். 19-ந் தேதி இரவு 10 மணிக்கு தோழர்கள் மூ. ரா. பிச்சை, எஸ். ஆர். நடராசன், ரா. பெருமான், ஆ. பேரான் முத்துராஜா ஆகிய நான்கு பேர்களைப் போலீசார் கைது செய்து 'ரிமாண்ட்' செய்தனர்.

வடகோவை:

தோழர் காளிசாமி என்பவரை காட்டூர் போலீசார் கைது செய்து ஜாமீனில் விடுவித்திருக்கின்றனர்.

கூட்டுறவு அடிப்படையில் வேலை செய்துவரும் கைத்தறிகளின் மொத்த எண்ணிக்கை, 1953 செப்டம்பரில் 6,82,000 இருந்தது—1955 செப்டம்பரில் 9,60,000 ஆகப் பெருகிவிட்டது.

எட்டயபுரத்தில்1500நெசவாளர்கள் வேலை நிறுத்தம்

தீப்பெட்டித் தொழிற்சாலைகள், சாயப் பட்டறைகள் இயங்கவில்லை

எல்லாக் கடைகளும் மூடப்பட்டிருந்தன; 1 500 நெசவாளர்கள் வேலை செய்யவில்லை; தீப்பெட்டித் தொழிற்சாலைகள், சாயப் பட்டரைகள் இயங்கவில்லை. 12-மணியளவில் 'சந்திரா பஸ் லைன்ஸ்' எட்டும் ஓடவில்லை.

மாலை 5 மணிக்கு ஒரு மாபெரும் அணிவகுப்பு முக்கிய வீதிவழியாக வந்து பிள்ளையார் கோவில் மைதானத்தை வந்தடைந்தது; அங்கு தோழர் எஸ். கலிங்கன் பேசினார்.

தோழர் அ. ராமசாமி மக்கள் மத்தியிலே உறுதிமொழியை வாசித்தார்.

முக்கூடலில் முழு வெற்றி

மாணவர்களின் ஒலி முழக்கம்

எல்லா பல சரக்குக் கடைகளும், வெற்றிலைபாக்கு கடைகள், பலகாரக் கடைகள், சில பீடி கம்பெனிகள், அரிசி மில்கள், சில அச்சகங்கள் காலையிலேயே அடைக்கப்பட்டுவிட்டன. உயர் நிலைப்பள்ளி மாணவ தலைவர் தோழர் ரெ. சீதாராம் காலையில் 8 மணியிலிருந்தே மாணவர்களுடன் பள்ளிக்குச் செல்லாமல் மாணவர்களை அணிவகுத்து நிற்கச் செய்து, பின் முழக்கங்கள் எழுப்பி வீடு சென்றனர். மாலை 6 மணிக்கு 5000 பேர்கள் அடங்கிய ஊர்வலம் ஒன்று, தி. மு கழகக் கட்டிடத்திலிருந்து புறப்பட்டுச் சென்று, கடைசியில் கழகக் கட்டிடம் வந்ததும் உறுதிமொழி வாசித்து மேற்கொள்ளப்பட்டது.

நன்றி அறிவிப்பு

"சர்வ கட்சி கூட்டணியின் வேண்டுகோளுக் கிணங்க சென்னை மாவட்ட தி. மு. கழகக் கிளைகள் சர்வகட்சிக் கூட்டணி அமைத்தும், அதற்கு வாய்ப்பில்லாத இடங்களில் தனித்து நின்றும், பிப்ரவரி 18-ம் நாளன்று 'அறிவகத்'தில் கூடிய நிர்வாகிகள் கூட்டத்தில் பொதுச் செயலாளர் அவர்கள் வழங்கிய அறிவுரைக்குஏற்ப கண்ணியம், கட்டுப்பாடு, கடமை என்பவைகளைக் கவசமாகக்கொண்டும் பிப்ரவரி 20-ம் தேதியன்று பொது வேலைநிறுத்தம், கடையடைப்பு, (அர்த்தால்) சென்னை மாவட்டம் முழுமையும் வெற்றி பெறச் செய்த கிளைக் கழகத் தோழர்களுக்கும், அவர்களின் வேண்டுகோளுக்கு செவிசாய்த்து நல்லமுறையில் ஒத்துழைத்த வியாபாரத்துறையினருக்கும், பொதுமக்களுக்கும் சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் தனது நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கிறது,"

என்று, சென்னை மாவட்ட தி. மு. கழக செயலாளர் தோழர் இளம்பரிதி அவர்கள் அறிவிக்கிறார்.

மதுவிலக்கு விசாரணைக் குழு சிபாரிசுகள்

இறுதியாக இன்னும் முடிவுசெய்யப்படவில்லையாம்

புதுடில்லி, பிப். 28—

மக்கள் சபையில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், பாதுகாப்பு மந்திரி டாக்டர் கட்ஜு, மதுவிலக்கு விசாரணைக் குழுவின் சிபாரிசுகள்மீது சர்க்கார் இன்னும் இறுதியாக முடிவு செய்யவில்லையென்றும், சர்க்காரின் பொதுக்கொள்கையை இராணுவம் இவ்விஷயத்தில் அனுசரித்து நடக்கும் என்றும் கூறியுள்ளார்.

ஆத்தூரில்

'நம் நாடு' விற்பனையாளர்

மா. மணி,
மாரி முடி திருத்தகம்,
கடைவீதி,
ஆத்தூர்—(சேலம் மாவட்டம்)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.